# ருவா சுவாச காற்று

காற்று - 15 | ஆகஸ்ட் 2025 | சுவாசம் - 07
ஆண்டு சந்தா ₹ 200/- தனி இதழ் ₹ 20/-





# இதயம் திறந்து உங்களுடன்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துகள்!

நீங்களும், உங்கள் குடும்பத்தாரும் சுகமாக இருக்கிறீர்கள் என விசுவாசிக்கிறேன். கடந்த ஏழு மாதங்களும் தம்முடைய நீதியின் வலது கரத்தினால் தாங்கி, தமது மிகுந்த கிருபை யினால் காத்துக்கொண்ட தேவாதி தேவனை உள்ளத்தின் ஆழத்திலிருந்து துதிக்கிறேன். இந்த எட்டாவது மாதத்தில் அடியெடுத்து வைக்க தேவன் கிருபை பாராட்டியிருக்கிறார். எட்டு என்றாலே புதிய ஆரம்பத்தைக் குறிக்கிறது. கர்த்தர் தமது புதிய அபிஷேகத்தினால், புதிய ஆசீர்வாதங்களினால் உங்களை நிரப்பப் போகிறார். எந்த காரியத்தில் நீங்கள் தடைபட்டு நிற்கிறீர்களா, எல்லா தடைகளையும் உடைத்து, புதிய வாசலைத் திறக்கப்போகிறார். தடைகளை உடைத்து இந்த மாதத்தில் வெற்றி வாகை சூட்டப்படப் போகிறீர்கள். கர்த்தர் உங்களோடு இருக்கிறார்.

உங்களுக்காக நான் கர்த்தரைத் துதிக்கிறேன்! உங்கள் ஜெபத்தினாலும், நீங்கள் தியாகத்தோடு அனுப்புகிற காணிக்கைகளினாலும் நம் “ரூஹா ஊழியங்கள்” தடை யில்லாமல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தினமும் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுகிறார்கள்! தினமும் அநேக அற்புதங்களை கர்த்தர் செய்கிறார்!! இந்த ஊழியத்தின் ஆசீர்வாதங்களில் நிச்சயமாக உங்களுக்கும் பங்குண்டு.

கடந்த ஜுன் மாதம் கன்னியாகுமரி மாவட்டம் கோழிப்போர்விளையில் பெத்தேல் திருச்சபை நடத்திய மூன்று நாட்கள் எழுப்புதல் பெருவிழா, வாலிபர் கூட்டங்களை கர்த்தர் அபரிவிதமாக ஆசீர்வதித்தார். அநேகரை கர்த்தர் வியாதிகளிலிருந்தும், பிசாசின் கட்டுகளிலிருந்தும் விடுதலையாக்கினார்.

கர்த்தருடைய கிருபையினால், ஜுலை மாதத்தில் அநேக வருடங்களுக்கு பிறகு துபாய் தேசத்தில் உள்ள திருச்சபைகளில் துதி ஆராதனை ஏறெடுத்து, தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கவும் கிருபை செய்தார். துபாயில் இயேசு கிறிஸ்து செய்த மகத்துவங்களை இந்தப் பத்திரிக்கையில் வெளி யிட்டிருக்கிறோம். அவைகளை வாசித்து கர்த்தரைத் துதியுங்கள்.

## நமது பாரத தேசத்திற்காக ஜெபியுங்கள்!

இந்தியா முழுவதும் 78வது சுதந்திர தினத்தைக் கொண்டாடுகின்ற இந்த மாதத்தில் நம்முடைய தாய் நாட்டின் ஆசீர்வாதத்திற்காக ஜெபிக்க வேண்டியது நம்முடைய கடமையா யிருக்கிறது. “சுதந்திர இந்தியா” என சொல்லிக்கொண்டாலும் பாவத்திலும், பலவித அருவருப்பான காரியத்திலும் அடிமைப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு நாளும் நெஞ்சை பதற வைக்கும் காரியங்களை தொடர்ந்து செய்தித்தாள்களிலும் பத்திரிக்கைகளிலும் கேள்விப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே ஒவ்வொரு நாளும் இந்தியாவின் சமாதானத்திற்காக ஜெபியுங்கள். கர்த்தர் நிச்சயம் நமது இந்தியாவை ஆசீர்வதித்து, தமது ஷேமத்தால் நிரப்புவார்.

## Ablaze 2025 - வாலிபர் கூடுகை

கர்த்தருக்கு சித்தமானால் வருகிற 16ம் தேதி ABLAZE என்ற தலைப்பில் வாலிபர்களுக்கான ஒரு நாள் சிறப்பு கூடுகையை Ruah Arrows Youth Fellowship ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வல்லமையான துதி ஆராதனையுடன், விசேஷமான தேவ ஊழியர்கள் தேவசெய்தி அளிக்க வருகிறார்கள். இவஆகவே, இதற்காக ஜெபித்துக்கொள்ளும்படி உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். சென்னையில் உள்ள வாலிபர்கள் தவறாமல் இதில் கலந்துக்கொள்ளும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன். மேலும் விபரங்கட்கு 9884901777 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ளவும்.

## 24/7 துதி ஜெப எழுப்பதல் மையம் கட்டப்பட ஜெபியுங்கள்

வேதாகமத்தில் சொல்லியிருக்கிற கடைசி காலத்திற்குரிய அடையாளங்களை நாம் ஒவ்வொரு நாளும் கேள்விப்பட்டும் கண்டும் வருகிறோம். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரம் வரப்போகிறார். அதற்கு முன்பாக உள்ள “கடைசி கால எழுப்புதலுக்காக” நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?

அதற்காக தினமும் ஜெபிக்கிறீர்களா? கர்த்தர் வெகு சீக்கிரத்தில் நம்முடைய இந்திய தேசத்தில் எழுப்புதலை அனுப்பப்போகிறார். எழுப்புதலை வேடிக்கை பார்ப்பதற்காக அல்ல, எழுப்புதலில் பங்கு கொள்வதற்காக கர்த்தர் உங்களை அழைக்கிறார்.

அதற்காகவே, நம்முடைய ரூஹா ஊழியங்கள் 24 மணிநேரமும் ஜெபம் மற்றும் துதி ஆராதனையை ஏறெடுப்பதற்காக ‘‘எழுப்புதல் ஜெப மையத்திற்கான இடத்தை அப்போஸ்தலனாகிய தோமா இரத்த சாட்சியாக மரித்த, செயிண்ட் தாமஸ் மவுண்டில் வாங்க கிருபை செய்திருக்கிறார். அந்த இடத்தில் கட்டிடத்தை கட்டி, உலகமெங்கும் துதி, ஜெப வீரர்கள் வந்து இந்திய தேசத்திற்காக ஜெபிப்பதற்காக கட்டிடத்தைக்கட்டி முடிக்க வேண்டும். சீக்கிரத்தில் ஜெப மையத்தைக்கட்டுவதற்கு தேவைகளைக் சந்திக்கும்படி ஜெபித்துக்கொள்ளுங்கள். கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாரானால் எழுப்புதலுக்காய் உதாரத்துவமாய் விதையுங்கள்.

அடியேனுக்காகவும், நம்முடைய ரூஹா ஊழியக் குடும்பத்திற்காகவும், விசேஷமாக இந்த ஆகஸ்ட் மாதத்தில் செய்து முடிக்க வேண்டிய எல்லா ஊழியங்களையும் தேவ சித்தத்தின்படியே ஜெயமாக செய்து முடிக்கத்தக்கதான கிருபைகளை கர்த்தர் எங்களுக்குத் தந்தருளவும், நன்றி பாடல்கள் நன்றாக ஒளிப்பதிவு செய்யப்பட்டு வெளியிடவும் தினமும் ஜெபியுங்கள்.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

உங்கள் சகோதரன்

**போதகர் ஆல்வின் தாமஸ்**





# நுகங்களை முறிக்கும் தேவன்!



இப்போதும் நான்
உன்மேல் இருக்கிற அவன் நுகத்தை முறித்து,
உன் கட்டுகளை அறுப்பேன். நாகூம் 1:13

நம்முடைய தேவனாகிய கர்த்தர், தம்மால் தெரிந்து கொள்ளபட்ட தேவ ஜனங்கள் சத்துருவின் கையில் அடிமையாயிருந்து துன்பப்படுவதை அவரால் சகித்துக்கொள்ள முடியாது. ஆகவே தம்முடைய பிள்ளைகளை துன்பப்படுத்துகிற சத்துருவின் பிடியிலிருந்து, அவன் அடிமைத்தனத்தின் நுகத்திலிருந்து விடுதலையாக்கி, சமாதான வாழ்க்கையைத் தருகிறார்.

நுகம் என்பது இரண்டு காளை மாடுகளின் கழுத்தில் வைக்கப்படும் ஒரு மரக்கட்டை. அந்த மரக்கட்டையுடன் நிலத்தை உழுவதற்காக பயன்படும் ஏர் என்ற கருவி அல்லது வண்டியை இணைத்து விடுவார்கள்.

இந்த நுகம் மிகவும் பாரமானதாயிருக்கும். இது அந்த காளைகளை அடக்கி, கட்டுப்படுத்துகின்றன. அந்த காளைகளினால் சுயமாக எதையும் செய்ய முடியாமல் ஆளோட்டிகளினால் வழிநடத்தப்படுகின்றன.

இன்றைக்கும் அநேகர், தங்கள் வாழ்க்கையில் இந்த காளை மாடுகளைப்போல பொருளாதார நெருக்கடி, கடன் பாரம், தீராத வியாதி நோய்கள், குடும்பத்தில் பிரச்சனைகள், விடமுடியாத பாவ பழக்கவழக்கங்கள், தலைமுறை சாபங்கள் என ஏதோ ஒரு நுகம் என்கிற அடிமைத்தனத்தில் மாட்டிக்கொண்டு வெளியே வரமுடியாமல் தவிக்கிறார்கள். சிலர் அந்த நுகத்தில் பழக்கப்பட்டு அதிலே வாழத் துவங்கிவிடுகிறார்கள். இதை வாசித்துக்கொண்டிருக்கும் நீங்களும் அந்த சூழ்நிலையில் இருப்பீர்களென்றால் தேவன் உங்கள் நுகங்களை முறித்து, **உங்களைக் கட்டி வைத்திருக்கிற கயிறுகளை அறுத்து உங்களை விடுதலையாக்க விரும்புகிறார்!**

## நுகத்தை முறித்து உங்களை நிமிர்ந்து நடக்கப்பண்ணுவார்

"நீங்கள் எகிப்தில் அடிமைகளாயிராதபடிக்கு,
நான் அவர்கள் தேசத்திலிருந்து உங்களை புறப்படப்பண்ணி,
உங்கள் நுகத்தடிகளை முறித்து, உங்களை நிமிர்ந்து
நடக்கப்பண்ணுகிற உங்கள் தேவனாகிய கர்த்தர்"
(லேவி 26:13)

இஸ்ரவேல் ஜனங்கள் 430 வருடங்கள் எகிப்தில் அடிமைகளாயிருந்தார்கள். எகிப்தியர்கள் அவர்கள் ஜீவனையும் கசப்பாக்கும் அளவிற்கு மிகக்கொடுமையாய் வேலை வாங்கினார்கள். ஆளோட்டிகளினால் மிகவும் ஒடுக்கப்பட்டார்கள். செங்கல் அறுப்பதற்கு தேவையான வைக்கோல்களையும் இவர்களே கொண்டு வர வேண்டும் என்று மிகவும் கடினமாய் நடத்தினார்கள். அப்பொழுது அவர்கள் தேவனை நோக்கி கூப்பிட்டபோது, தேவன் அவர்களின் பெருமூச்சின் சத்தத்தைக்கேட்டு அவர்களுக்கு இரங்கி, அவர்களை எகிப்தின் நுகத்திலிருந்து விடுதலையாக்கினார். எகிப்தின் நுகத்தினால் கூனி குறுகி போயிருந்த அவர்களை நிமிரப்பண்ணி வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானுக்கு நேராக நடத்திக்கொண்டு போனார்.



அன்பானவர்களே, நீங்கள் செய்யும் வேலையில் மிகவும் உங்களை ஒடுக்குகிறார்களா? உங்கள் சக்திக்கு மிஞ்சின வேலையை செய்ய சொல்லி உங்களை அதிகாரம் பண்ணுகிறார்களா? கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். கர்த்தர் உங்கள் அழுகையின் சத்தத்திற்கு அவர் செவிக்கொடுத்து நுகத்தடிகளை உடைத்து உங்களை விடுதலையாக்குவார்.

உன்னோடே போராடினவர்களைத் தேடியும் காணாதிருப்பாய். உன்னோடே யுத்தம் பண்ணின மனுஷர் ஒன்றுமில்லாமல் இல்பொருளாவார்கள். (ஏசாயா 41:12)



## நுகத்தடிகளை உடைத்துபோவார்

ஜல்லிக்கட்டில் மாடுபிடி வீரர்கள் தங்கள் முழு பெலத்தையும் உபயோகித்து, காளைகளை அடக்க முயல்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். நல்ல உடல் அமைப்புடன், சீவிய கொம்புகளுடன், வீரர்களை மிரட்டும் இந்த காளையின் கழுத்தில் நுகத்தை வைத்து, காளையின் மூக்கின் துவாரத்தின் வழியாக கயிற்றைக்கட்டி நுகத்தோடு இணைக்கும்போது, அதனால் ஒன்றும் செய்ய முடியாது.

நீங்கள் பலசாலிதான். ஆனால் சில நுகங்கள் உங்கள் மீது வைக்கப்படும்போது நீங்கள் பெலனற்றவர்களாக மாற்றப்படுகிறீர்கள். உங்கள் சத்துருவாகிய பிசாசானவன், பலமுள்ள உங்களை பலனற்றவர்களாக மாற்றுகிறான். எப்பொழுது உங்கள் மீது நுகத்தைச் சுமத்தலாம் என்று வகைத்தேடி சுற்றிக்கொண்டிருக்கிறான். ஆனால் தேவன், ''நீங்கள் சுமந்த நுகத்தடியையும், உங்கள் தோளின்மேலிருந்த மிலாற்றையும், ஆளோட்டியின் கோலையும் தேவன் முறித்துப்போடுவார்.'' (ஏசாயா 9:4)

தேவன் உங்கள் வாழ்க்கையில் நுகத்தடிகளை முறித்துப்போடும்போது, நீங்கள் ஜல்லிக்கட்டு மாட்டைப்போல உங்களை வீழ்த்த நினைக்கும் சத்துருவுக்கு விரோதமாக எதிர்த்து நிற்பீர்கள். உங்களை பயமுறுத்துகிறவர்களுக்கு நீங்கள் பயப்படாமல் இருப்பீர்கள். யாரெல்லாம் நுகத்தில் மாட்டிக்கொண்டு கஷ்டப்படுகிறவர்களுக்கு அந்த நுகத்திலிருந்து வெளியே வர உதவுவீர்கள்.



உங்கள் வாழ்க்கையில் உள்ள நுகம் முறிக்கப்படுவதற்கான ஆயுதங்கள் என்ன என்பதை சற்று தியானித்து, விடுதலையின் வாழ்வைப்பெற்றுக்கொள்ள செய்ய வேண்டிய காரியங்களைக் குறித்து பார்ப்போம்.

## 1 அபிஷேகத்தினால் நுகம் முறிக்கப்படும்



**''அந்நாளில் உன் தோளினின்று அவன் சுமையும், உன் கழுத்தினின்று அவன் நுகமும் நீக்கப்படும். அபிஷேத்தினால் நுகம் முறிந்துபோம்''** (ஏசாயா 10:27)

இந்த வசனமானது ஆங்கிலத்தில் The yoke will be broken because you have grown so fat என்று எழுதப்பட்டுள்ளது. எருதுகளின் நுகம் எப்படி உடைக்கப்படும் என்றால், அதற்கு கொடுக்கப்படும் பலமான ஆகாரத்தினால் அதன் கழுத்தில் கொழுப்புகள் உண்டாகி, அந்த கொழுப்புகள் எலும்புகளுக்கு பலத்தைத் தரும்போது நுகம் உடைக்கப்படுகிறது.

**என் கொம்பைக் காண்டாமிருகத்தின் கொம்பைப்போல உயர்த்துவீர்; புது எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்படுகிறேன்** (சங்கீதம் 92:10)

தமிழில் காண்டாமிருகம் என்று தவறாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதன் சரியான மொழிபெயர்ப்பு எருது. தேவனாகிய கர்த்தர் எருதின் கொம்பைப்போல நம்மை வலிமையாக்கி, புது எண்ணெயால் நாம் அபிஷேகம் பண்ணப்படும்போது,

நம் வாழ்க்கையில் உள்ள நுகங்கள் தானாக உடைந்து விழும். எண்ணெய் என்பது பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கிறது. இந்த பரிசுத்த ஆவியானவரை நாம் பெற்றுக்கொள்ளும்போது, அவர் நம்மை விடுதலையாக்குகிறார். வெள்ளம்போல சத்துரு வரும்போது கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாக கொடியேற்றுகிறார். (ஏசாயா 59:19)

பாவம், சாபம் என்கிற நுகம் உங்கள் வாழ்க்கையில் முறிக்கப்பட நீங்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்வது மிக மிக அவசியம். பரிசுத்த ஆவியானவரின் துணையில்லாமல் நீங்கள் பரிசுத்தமாய் வாழ முடியாது. உங்களுக்குள் இருக்கும் அபிஷேகத்தின் அளவை நாளுக்கு நாள் நீங்கள் அதிகரிக்கும்போது நுகங்கள், கட்டுகள் தானாக உடைந்து விழும்.

ஒரு சூடான பாத்திரத்தில் ஈ வந்து உட்காராததுபோல, நீங்கள் அக்கினி அபிஷேகத்தினால் நிறைந்து பரிசுத்த ஆவியானவருடன் இணைந்து செயல்படும்போது, பாவ, சாப நுகங்கள் தெறித்துவிடும்.

## 2 கர்த்தருடைய வார்த்தையினால் நுகம் முறிக்கப்படும்



**தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.** (எபிரேயர் 4:12)

இந்த உலகங்களை உண்டாக்கிய கர்த்தருடைய வார்த்தையானது மிக வல்லமையுள்ளது. இந்த வல்லமையுள்ள வார்த்தை உங்கள் வாழ்க்கையில் காணப்படும் நுகத்தை முறித்து விடும். தேவனிடத்திலிருந்து புறப்பட்டு வருகிற ஒரு வார்த்தை உங்கள் வாழ்க்கையைத் தலைகீழாக மாற்றிவிடும்.

பதினெட்டு வருஷமாய் உதிரப்போக்கினால் பாடுகளை அனுபவித்து, எந்த வைத்தியனாலும் குணமாக்க முடியாத வியாதி என்கிற நுகத்தை சுமந்து கொண்டிருந்த அந்த இளம்பெண் ஜனக்கூட்டத்தின் மத்தியில் நடந்து வந்து கொண்டிருந்த இயேசுகிறிஸ்துவின் வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டபோது, அந்நேரமே அவளின் உதிரப்போக்கு நின்று, தன் சரீரத்தில் ஆரோக்கியத்தை உணர்ந்தாள். அவள் இயேசுவின் வஸ்திரத்தை தொட்டதற்கு மிக முக்கிய காரணம் உண்டு. யூதர்கள் தலித் என்று சொல்லப்படுகிற தங்கள் சால் வையின் குஞ்சங்களில் கர்த்தருடைய வார்த்தையை எழுதி வைத்திருப்பார்கள். அவர்கள் அதைப்பிடித்து கர்த்தருடைய வார்த்தையை அறிக்கையிடுவார்கள். இந்தப் பெண் தொட்டது வெறும் வஸ்திரத்தையல்ல, கர்த்தருடைய வார்த்தையைத் தொட்டாள்.

ஆம், அன்பானவர்களே, நீங்கள் கர்த்தருடைய வார்த்தையை வாசித்து அதைத் தியானிக்கும்போது, உங்கள் வாழ்க்கையில் வியாதி என்கிற நுகம் முறிக்கப்படும். நான் சாவாமல் பிழைத்திருந்து கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன் **(சங்கீத் 118:17). இயேசுவின் தழும்புகளால் குணமானேன். அவர் உன் அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார், வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன், நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்** போன்ற சுகமளிக்கும் கர்த்தருடைய வார்த்தையை விசுவாசத்துடன் அறிக்கையிடுங்கள். நிச்சயமாக கர்த்தர் ஜீவனுள்ள வார்த்தை உங்களை விடுதலையாக்கும்.

அதுமாத்திரமல்ல, கர்த்தருடைய நாமம் என்பது தேவனுடைய வார்த்தையே! (வெளி 19:13) என்று வேதம் கூறுகிறது. இந்த வல்லமையுள்ள கர்த்தருடைய நாமம் உங்களை நுகத்திலிருந்து விடுதலையாக்கும். மாந்திரீகங்கள், ஏவல், பில்லி சூனியங்கள், செய்வினைக்கட்டுகளினால் சீர்குலைந்து போயிருக்கிறீர்களா? இயேசு என்கிற நாமத்தைக் கூப்பிடுங்கள். இயேசு என்கிற நாமம் உங்களை இரட்சிக்கிற நாமம். இந்த நாமத்திற்கு பிசாசுகள், பாதாளம் நடுங்கும். வேதம் சொல்லுகிறது, அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை, நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை (அப் 4:12)

## இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால்
நுகம் முறிக்கப்படும்

**மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி, தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.** (வெளி 12:11)

நமது எதிராளியாகிய சாத்தான், திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறான். கர்த்தருடைய பிள்ளைகள் சமாதானமாக, சந்தோஷமாக வாழக்கூடாது என்பதற்காக விசுவாசிகளின் இல்லங்களில் குடியைக் கெடுத்துக்கொண்டிருக்கிறான். இன்றைக்கு அநேக குடும்பங்களில் பிரிவினைகள், விவாகரத்து தலைவிரித்தாடுகிறது. இப்படிப்பட்ட நுகங்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் மாத்திரமே முறிக்கப்படும்.

கல்வாரி சிலுவையில் இயேசு கிறிஸ்து சிந்தின இரத்ததினால் பாவம் என்கிற நுகம் முறிக்கப்பட்டு பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது. பிதாவாகிய தேவனுக்கு தூரமாயிருந்த நாம் இப்பொழுது அவருடைய இரத்தத்தின் மூலமாக மிக சமீபமாயிருக்கிறோம். வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்ததினாலும் ஒரே தரம் பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து நித்திய மீட்பை உண்டு பண்ணினார். (எபிரேயர் 9:12)



இஸ்ரவேல் ஜனங்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்தது இரத்தமே. ஆம், அன்று இரவிலே அடிக்கப்பட்டு நிலைக்கால்களில் பூசப்பட்ட பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் நிமித்தமாக இஸ்ரவேல் ஜனங்களின் வீடுகளில் மரணம் ஏற்படவில்லை. ஆனால் இரத்தம் பூசப்படாத எகிப்தியரின் வீடுகளில் முதற்பேறான அனைத்தும் கொல்லப்பட்டது. இதனால் பார்வோன் அவர்களை எகிப்திலிருந்து அனுப்பிவிட்டான். **அன்பானவர்களே, நீங்கள் நுகத்தில் கட்டப்பட்டு அடிமைத்தனத்தில் வாழ்ந்து கொண்டிருப்பது தேவனுக்கு பிரியமல்ல. இன்றே அதிலிருந்து விடுபட தேவனை நோக்கி கூப்பிடுங்கள். மனதுருக்கமுள்ள தேவன் உங்களுக்கு இரங்கி இரட்சிப்பார்.**



### விசுவாசத்தோடு இந்த ஜெபத்தை ஏறெடுங்கள்:

அன்பின் பரலோக பிதாவே, குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உம்மிடத்தில் ஜெபிக்கிறேன். இப்போதும் நான் உன்மேல் இருக்கிற அவன் நுகத்தை முறித்து, உன் கட்டுகளை அறுப்பேன் என்று நீர் எனக்குக் கொடுத்திருக்கிற வாக்குத்தத்தத்திற்காக உமக்கு ஸ்தோத்திரம்!

நான் முன்னேற முடியாமல் என்னை கட்டி வைத்திருக்கும் எல்லா நுகத்தடிகளையும் நீர் முறித்து, விடுதலையின் வாழ்விற்குள் என்னை நடத்துவீராக. நீர் என்னை உமது ஆவியினால் நிரப்பி, என்னை அபிஷேகம் பண்ணுவீராக. உமது வல்லமையுள்ள வார்த்தையினாலும், உமது இரத்தத்தினாலும் நான் ஜெயம் எடுக்க கிருபை செய்வீராக. என்னையும் என் குடும்பத்தையும சாட்சியாக நிறுத்துவீராக. ஆமென்!

# நெசா NESSA TRUST

சமுதாயத்தில் நலிவடைந்த மற்றும் பொருளாதாரத்தில் கஷ்டப்படுகிற ஏழை எளியவர்களுக்கு நம்முடைய நெசா தொண்டு நிறுவனத்தின் மூலமாக ஒவ்வொரு நாளும் உதவி செய்து கொண்டு வருகிறோம்.

## இலவச டியூசன் சென்டர்







பள்ளிகளில் படிக்கும் ஏழை மாணவர்களின் கல்வியில் சிறந்து விளங்குவதற்காக இந்த கல்வியாண்டில் மாலை நேரங்களில் இலவச டியூசன் எடுக்கப்பட்டு வருகிறது. சென்னையில் அம்பத்தூர் கள்ளிக்குப்பம் பகுதி மற்றும் கோயம்பேடு பகுதியில் உள்ள குடிசைப்பகுதிகளில் இச்சேவைகள் நிறைவேற்றப்படுகின்றன. அதுமட்டுமல்லாது தினந்தோறும் ஏதாவது ஒரு சிற்றுண்டி அந்த மாணவர்களுக்கு கொடுத்து வருகிறோம்.



## ஆதரவற்றவர்களுக்கு மதிய உணவு









நம்முடைய நெசா தொண்டு நிறுவனத்தின் மூலமாக ஒவ்வொரு நாளும் சாலையோரங்களில் வசிக்கும் சுமார் 200 ஆதரவற்றவர்களுக்கு மதிய உணவு வழங்கி வருகிறோம். செவ்வாய் மற்றும் சனிக்கிழமைகளில் புனித தோமையார் பகுதியில் உள்ள சகாயம் இல்லத்தில் உள்ள முதியவர்களுக்கு தேவையான காய்கள் நிறைந்த தரமான நல்ல ஊட்டசத்து மிகுந்த உணவுகளை கொடுக்கப்பட்டு வருகிறது.

## மதிய உணவு அளிக்க இரண்டு சக்கரம் மற்றும் நான்கு சக்கர **வாகனங்கள் தேவை!**



நீங்கள் மளிகைக்கடை அல்லது காய்கறி கடைகள் வைத்து வியாபாரம் செய்பவர்கள் என்றால் ஆதரவற்றவர்களுக்கு கொடுக்கப்படும் மதிய உணவுக்கான காய்கறிகளை அளித்து உதவலாம். மேலும் இந்த மதிய உணவுகளை, தினமும் வாகனத்தை வாடகைக்கு எடுத்து கொடுத்து வருகிறோம். நமக்கென்று சொந்தமாக இரண்டு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் இருந்தால் இதற்கான செலவுகளைக் குறைத்து உணவுத் தேவைப்படுகிற தூர இடங்களுக்கு எடுத்துச் செல்ல உதவியாயிருக்கும். தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து இந்த நற்பணிகள் நிறைவேற தங்கள் கரங்களை நீட்டும்படி கேட்டுக்கொள்கிறோம்.

உங்களுடைய உதாரத்துவமான நன்கொடைகளை NESSA TRUST என்ற பெயரில் மணி ஆர்டர் அல்லது காசோலையாக அனுப்பலாம். நீங்கள் நன்கொடைகளை அனுப்பிய பிறகு 9884901777 என்ற எண்ணிற்கு வாட்சப் அல்லது போன் மூலமாக கட்டாயம் தெரிவியுங்கள். உங்களுக்கு இரசீது அனுப்ப எங்களுக்கு ஏதுவாயிருக்கும்.

**நீங்கள் அனுப்புகிற நன்கொடைக்கு 80நீ வரிவிலக்கு உண்டு.**

**NESSA TRUST**

| | |
|---|---|
| Bank: | HDFC BANK LTD |
| Acc. Name: | NESSA TRUST |
| Acc.No: | 50200002673830 |
| Branch Name: | KODAMBAKKAM BRANCH |
| IFSC Code: | HDFC0000574 |

UPI ID: **nessatrust.67026734@hdfcbank**

Gpay / Phonepe number: **+91 9444150777**

Address: Nessa Trust, No: 82, Jawaharlal Nehru Salai, Vadapalani, Chennai - 600026.

உங்கள் பிறந்தநாள் மற்றும் திருமண ஆண்டு நிறைவு விழாவின்போது ஏழை **எளியவர்களையும், திக்கற்றவர்களையும் மறந்துவிடாமல் நெசா மூலமாக அவர்களுக்கு உதவி செய்ய உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம்!**

# துபாய் தேசத்தில்
# கர்த்தரின் ரூஹா சுவாசக்காற்று!



கடந்த ஜுலை மாதம் துபாய் தேசத்தில் நமது போதகர் ஆல்வின் தாமஸ் அவர்கள் மூலம் தேவன் மகிமையான காரியங்களை செய்தார்.

ஜுலை 11ம் தேதி KRCI Tamil சபை நடத்தின அற்புத வாழ்வு மாலை ஆராதனையில் துதி ஆராதனை ஏறெடுத்து, வல்லமையான தீர்க்கதரிசன வார்த்தையை பிரசங்கிக்கவும் கர்த்தர் கிருபை செய்தார். விசேஷமாக வாக்குத்தத்த வசனங்கள் மற்றும் ரேமா வார்த்தைகள் மூலமாக ஒவ்வொரு நாளும் நம் ஊழியத்தோடு இணைந்து வருகிற குடும்பங்களை சந்திக்க கர்த்தர் கிருபை செய்தார்.

ஜுலை 12 சனிக்கிழமை பெராக்கா ஊழியங்கள் மூலமாக நடத்தப்பட்ட சிறப்பு ஆராதனையில் மலையாள பாடல்களை பாடி வல்லமையான துதி ஆராதனை நடத்தவும், தீர்க்கதரிசன வார்த்தையை அளிக்கவும் கர்த்தர் கிருபை பாராட்டினார். பங்குபெற்ற அனைவரும் தேவ பிரசன்னத்தினால் நிரப்பட்டனர்.

அன்று இரவு Abu Dhabiயில் உள்ள New Grace AG சபையின் விசேஷித்த ஆராதனையில் தேவன் மகிமையாய் வெளிப்பட்டார். வருஷங்கள் நடுவிலே உமது கிரியை உயிர்ப்பியும் என்ற தீர்க்கதரிசன வார்த்தையை பிரசங்கித்த போது அநேகர் உள்ளங்களை கர்த்தர் தொட்டார். இறுதி ஜெப வேளையில், தெய்வீக சுகத்திற்கு சிறப்பு ஏறெடுக்கப்பட்டதோடு கர்த்தர் தீர்க்கதரிசனமாய் அநேகரோடு இடைப்பட்டார்.

13 ஆம் தேதி ஞாயிறு, போதகர். செல்வின் சாமுவேல் அவர்களின் Kingdom திருச்சபையின் இரண்டு ஆராதனைகளில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஆராதனை எடுக்கவும், தீர்க்கதரிசன வார்த்தையை பிரசங்கிக்கவும் கர்த்தர் கிருபை செய்தார். அநேகர் தேவனுடைய தொடுதலைப் பெற்றுக்கொண்டார். தீர்க்கதரிசனமாய் ஆண்டவர் சபை மக்களோடு இடைப்பட்டார்.



மாலையில் CCGM சபையில் நடைபெற்ற விசேஷித்த ஞாயிறு ஆராதனையில் பரிசுத்த ஆவியானவர் வல்லமையாய் அசைவாடினார். அநேகர் தெய்வீக தொடுதலை பெற்றுக்கொண்டனர். தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது.









KRCI TAMIL CHURCH







BERAKAH MINISTRIES


NEW GRACE AG CHURCH


KINGDOM CHURCH


CCGM CHURCH



# கோழிப்போர்விளை எழுப்புதல் பெருவிழாவில் தேவன் செய்த மகத்தான காரியங்கள்




















கன்னியாகுமரி மாவட்டம் கோழிப்போர்விளை என்கிற இடத்தில் பெத்தேல் சபையின் மூலமாக ஜூன் 27,28,29 ஆகிய மூன்றுநாள் எழுப்புதல் பெருவிழா நடைபெற்றது. ஒவ்வொரு நாள் மாலையிலும் இப்பகுதியைச் சுற்றியுள்ள பல கிராமங்களிலிருந்தும் சபைகளிலிருந்தும் ஜனங்கள் பங்குபெற்று தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டனர்.

இக்கூட்டங்களில் நமது போதகர். ஆல்வின் தாமஸ் அவர்கள் மகிமையான துதி ஆராதனை மற்றும் வாழ்வை மறுரூபப்படுத்தும் கர்த்தருடைய தீர்க்கதரிசன தேவசெய்தியளிக்கவும் கர்த்தர் கிருபைசெய்தார். இரண்டாம் நாள் வாலிபர்களுக்கான விசேஷித்த கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் "மாதிரியாய் இரு" என்கிற தலைப்பில் தேவசெய்தியின் மூலமாக கர்த்தர் வல் லமையாய் இடைப்பட்டார். பல்வேறு திருச்சபையிலிருந்து வாலிபர்கள் கலந்துக்கொண்டதோடு, அநேகர் அளவில் லா பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொண்டனர்.

குறிப்பாக 29 ஆம் தேதி மூன்றாம் நாள் காலையில் பரிசுத்த ஆவியானவரின் ஏவுதலோடு பெரேக்கா மகிமையின் கூடாரம், போதகர். ஜஸ்டின் மோசஸ் அவர்கள் திருச்சபையின் விசுவாசிகளையும் போதகரையும் பெலப்படுத்தும் கர்த்தருடைய வார்த்தையை பகிர்ந்துகொள்ளவும், அவர்களுக்காக விசேஷித்த பிரார்த்தனை ஏறெடுக்கவும் தேவன் கிருபை பாராட்டினார்.








# A Call to Build

INDIAN HOUSE OF PRAYER FOR EVERYONE

**IN-HOPE**

PRAISE · PRAY · PROCLAIM




**தேசங்களின் ஆசீர்வாதத்திற்காக 24/7 மணி நேர துதி மற்றும் மன்றாட்டு ஜெப மையத்தை சென்னையில் கட்டுவதற்கு தேவன் தந்த தரிசனத்தில் நீங்களும் ஒரு தூணாக இருக்க விரும்புகிறீர்களா?**

## தரிசனம்

- நமது இந்திய தேசத்தின் எழுப்புதலுக்காக 24 மணி நேரமும் ஆராதனை வீரர்களும் ஜெப வீரர்களும் ஒன்றிணைந்து கர்த்தரை நோக்கி துதி பலிகளையும் ஜெப தூபத்தையும் ஏறெடுக்கும் ஒரு பலிபீடத்தை ஸ்தாபிக்க
- விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை திரும்ப எடுப்பிக்கும் விதமாக தேவ பிரசன்னம் நிறைந்த பலிபீடத்தை உருவாக்குதல்
- அப்போஸ்தலனாகிய தோமையார் இரத்த சாட்சியாக மரித்த புனித தாமஸ் மலையில் பலிபீடத்தைக் கட்ட

## பணி

- ஆராதனை, ஜெபம் மற்றும் திருப்புமுனைகளை பிரகடனப்படுத்துகிற துதி ஆராதனை வீரர்களையும் மன்றாட்டு ஜெப வீரர்களையும் உருவாக்குதல்
- இந்தியா மற்றும் உலக நாடுகளில் வெவ்வேறு திருச்சபைகள், தனி நபர் மற்றும் குழுக்கள் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் ஆராதனை மற்றும் ஜெபத்திற்காக ஒதுக்கீடு செய்தல்
- மலையின் மீது நடக்கும் Movement on the Mount ஆராதனையை உலகளவில் 24 மணி நேரமும் அர்ப்பணிப்புள்ள மீடியா மிஷனரிகள் குழு மூலம் ஒளிபரப்புதல்

## ஏற்பாடு

- சென்னையின் மையப்பகுதியில் இந்த மகத்தான தரிசனத்தை நிறைவேற்ற, தேவன் கொடுத்த இந்த முக்கியமான கடைசிகால திட்டத்தை நிறைவேற்ற தேவ ராஜ்யத்தின் பங்காளர்களாக இணைந்து விதைப்பவர்கள் தேவை
- தேவனுடைய வீட்டைக்கட்ட நீங்கள் உதவும்போது, கர்த்தர் உங்களையும் உங்கள் வீட்டையும் அதிகமாக ஆசீர்வதிப்பார் என்று விசுவாசிக்கிறோம்.
- இந்த எழுப்புதல் மையம் கட்டுவதற்காக விதைக்கும் ஒவ்வொருவரின் பெயரும் நினைவு சுவரில் பொறிக்கப்படும். மேலும் நமது ஜெபவீரர்கள் அவர்களுக்காக தினமும் ஜெபிப்பார்கள்.

## உங்கள் காணிக்கைகளை எளிதாக விதைக்கலாம்!

**1**

**RUAH MINISTRIES BUILDING FUND**
Acc. No.: **50200033712782** Bank Name: **HDFC BANK**
Branch: **Kodambakkam** IFSC Code: **HDFC0000574**

**RUAH MINISTRIES**
Acc. No.: **05741450000037** Bank Name: **HDFC BANK**
Branch: **Kodambakkam** IFSC Code: **HDFC0000574**

**2**

SCAN HERE TO GIVE

**3**

Cheque in Favour of:
**Ruah Ministries Building Fund**

**4**

for giving online visit:
**ruahministries.org/give-online**

தேவன், தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து சீக்கிரத்திலே அவர்களுக்கு நியாயஞ்செய்வார் (லூக்கா 18:7,8)

FOR MORE INFORMATION **9884710777 | 9884901777**

# WAYS TO GIVE

**1 Google Pay**

**+91 9444150777**

G Pay · Paytm

**2 Website** (Inside India / International)

Our Secure Payment Gateway

**ruahministries.org/give-online**

Razorpay · PayPal

SCAN QR CODE TO PAY THRIUGH UPI APP

**RUAH MINISTRIES**

| | |
|---|---|
| Bank: | HDFC BANK LTD |
| Name: | RUAH MINISTRIES |
| Acc.No: | 05741450000037 |
| Branch Name: | KODAMBAKKAM BRANCH |
| IFSC Code: | HDFC0000574 |

**எளிதாக உங்கள் காணிக்கைகளை விதைக்கலாம்!**

உங்களுடைய காணிக்கைகளை அனுப்பியதும் தவறாமல் **9884901777** என்ற எண்ணிற்கு தகவல்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுது உங்களுடைய காணிக்கைக்கான இரசீது மற்றும் கடிதம் உங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு ஏதுவாயிருக்கும்.

**வியாதியினால் கஷ்டப்படுகிறீர்களா? கடன் தொல்லையா?**

**குடும்பத்தில் சமாதானம் இல்லையா?**

அற்புதத்திற்காக காத்துக்கொண்டிருக்கிறீர்களா? கவலைப்படாதிருங்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். இன்றும் உங்களுக்கு அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்வார். உங்களுடைய ஜெப விண்ணப்பங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்க ஆயத்தமாயிருக்கிறோம்.

## பரிசுத்த ஆராதனைகள்

1 **முதல் ஆராதனை** காலை 6 மணிக்கு

2 **இரண்டாம் ஆராதனை** காலை 8 மணிக்கு

**இடம்**: ரூஹா துதி ஜெப மையம், வடபழனி

3 **மூன்றாம் ஆராதனை** காலை 10 மணிக்கு

**இடம்**: CSI St. Thomas Hr. Sec School, St. Thomas Mount, Chennai

(ஒவ்வொரு **மாதமும் முதல் வாரத்தில்** திருவிருந்து ஆராதனை நடைபெறும்)

| | |
|---|---|
| **செவ்வாய்** | **தெபோராள் பெண்கள் கூடுகை** (மாலை 6.30 மணிக்கு) |
| **புதன்** | **இயேசுவின் தொடுதல்** (விசேஷித்த சுகம் மற்றும் விடுதலை ஜெபம்) காலை 10 மணிக்கு |
| **சனி** | **வாலிபர்கள் கூடுகை** (மாலை 6.30 மணிக்கு) |

ஒவ்வொரு மாதமும் **2வது சனிக்கிழமை விசேஷித்த உபவாசம் ஜெபம்** (காலை 10 மணிக்கு)

ஒவ்வொரு மாதமும் **3வது வெள்ளிகிழமை முழு இரவு ஜெபம்** (இரவு 10 மணிக்கு)

ரூஹா ஊழியங்களின் ஊழிய விபரங்களை அறிந்து கொள்வதற்கும், உங்களுடைய ஜெப உதவிக்கும் **9884901777, 9884710777** என்ற எண்களைத் தொடர்பு கொள்ளலாம். மின்னஞ்சல் முகவரி: **prayer.ruah@gmail.com**